RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22266

OPEN ACCESS

# சிலம்பில் பண்பாட்டு மரபுகள்

இரா. கலைச்செல்வி [அ, *], வெ. பானுமதி [அ]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம்-636016. தமிழ்நாடு, இந்தியா

# Cultural Traditions in Silapathikaram

**R. Kalaiselvi [a,*], V. Banumathi [a]**

[a] Department of Tamil, Sri Sarada College for Women, Salem-636016, Tamil Nadu, India

* Corresponding Author: kalaitamil606@gmail.com

Received: 29-09-2022
Revised: 08-11-2022
Accepted: 15-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

Culture has many meanings but it refers best about the land and the spirit of the people. Culture is the refined human emotions. The customs that prevailed among the people from time to time are transformed into cultural traditions. Kundalakesi as a kundalam worn in the ears, Valayapathi as a bangle worn on the hands, Sivakasintamani as a ruby beam shining on the chest showering mercy, Manimekagalai as a pearl-studded megalai, Silapathikaram as a beautiful anklet in the feet, all these are weared by the Tamil woman as ornaments and they enjoys it. Poet Suthananda Bharatiyar mentions that she wears Sulamani as a crown of jewels on her head and carries the scepter of Thirukkural and rules without any slippage of justice. In this article, we will see about the Silambam (anklet) on the lotus feet of such a special Tamil woman.

**Keywords:** Ornaments, Tamil woman, Manimekagalai, Sangam Literature

## முன்னுரை

பண்பாடு என்பது பல பொருளைக் கொண்டதாயினும் நிலத்தையும், மக்களின் உள்ளத்தையும் சிறப்பாக குறிப்பிடுகிறது. செம்மைப்படுத்தப்பட்ட மானிட உணர்வுகளே பண்பாடாகும். காலங்காலமாக மக்களிடையே நிலவி வந்த பழக்க வழக்கங்களே பண்பாட்டு மரபுகளாக மாற்றம் பெறுகின்றன.

"காதொளிரும் குண்டலமும் கைக்கு

வளையாபதியும் கருணை மார்பின்

மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில்

மேகலையும் சிலம்பார் இன்பப்

போதொளிர் பூந்தாளிணையும் பொன்முடிச்

சூளாமணியும் பொலியச் சூடி

நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்

தாங்குதமிழ் நீடு வாழ்க!"

என்ற பாடலின் மூலம் செவிகளில் அணியும் குண்டலமாக குண்டலகேசியையும், கைகளில் அணியக்கூடிய வளையலாக வளையாபதியையும், கருணை பொழியும் மார்பினிலே மாணிக்க ஒளி வீசும் ஆரமாக சீவகசிந்தாமணியையும், மென்மையான இடையினிலே முத்துக்கள் கோர்த்த

மேகலையாக மணிமேகலையையும், பொன் போன்ற அழகிய பாதங்களிலே சிலப்பதிகாரத்தையும் அணிகலன்களாக தமிழன்னை சூடிக்கொண்டு மகிழ்கின்றாள். மேலும் தன் தலையிலேயே மணிமகுடமாக சூளாமணியை அணிந்து கொண்டு உலகப் பொதுமறையாம் திருக்குறளை கையிலேயே செங்கோலாய் ஏந்திக் கொண்டு நீதி வழுவாமல் ஆட்சி செய்து வருகிறாள் என்பதை கவியோகி சுத்தானந்த பாரதியார் குறிப்பிடுகிறார். அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழன்னையின் பாத கமலத்திலே வீற்றிருக்கின்ற சிலம்பினைப் பற்றி இவ்வாய்வில் காண்போம்.

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று காண்டங்களையும், மங்கல வாழ்த்துப் பாடல் முதல் வரந்தரு காதை ஈறாக முப்பது காதைகளையும் கொண்டுள்ளது.

## சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள்

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்

உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்

ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"

என்ற மூன்று உண்மைகளை பாவிகமாக கொண்டு விளங்குகிறது.

## சிலப்பதிகாரத்தின் சிறப்புகள்

தமிழின் முதல் காப்பியம், தமிழ்த் தேசியக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக்காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், புரட்சிக்காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒருமைப்பாட்டு காப்பியம், சமயசார்பற்ற காப்பியம் என்றெல்லாம் பாராட்டப்பட்ட காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி

யாரம் படைத்த தமிழ்நாடு" (Bharathiyar, 2016)

என பாரதியார் சிலப்பதிகாரத்தின் புகழினைப்பாடுகிறார். இத்தகைய சிறப்பு வாய்ந்த சிலப்பதிகாரத்திலுள்ள பண்பாட்டு மரபுகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

## சிலம்பின் தொடக்கம்

நம் முன்னோர்கள் ஒவ்வொரு செயலை செய்யும் போதும் எவ்வாறு செய்ய வேண்டும் என்று வழிமுறைகளை கூறியுள்ளார்கள். அவர்கள் கூறிய வழிமுறைகளை பின்பற்றி செயல்களைச் செய்வது மரபாகும். புதிதாக ஒரு நூலை, நிகழ்வைத் தொடங்கும் பொழுது இறைவனையோ இயற்கையையோ வாழ்த்துதல், போற்றுதல் மரபாகும்.

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்"

மேற்காணும் பாடல் வரிகளின் மூலம் திங்களையும், ஞாயிற்றையும், மாமழையும் பூம்புகாரையும் போற்றியே இளங்கவடிகள் சிலப்பதிகாரத்தைத் தொடங்கியிருப்பதன் மூலம் அவர், பண்பாட்டு மரபுகளைப் பின்பற்றியுள்ளார் என்பது புலனாகிறது (Arunachalam, 1971).

## திருமணம்

திருமணம் என்பது ஒரு ஆணும், ஒரு பெண்ணும் இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடத்தப் பெறும் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகும். மனிதனால் மனித சமூகத்தின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்ட ஒழுக்க முறையாகும். திருமணம் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண், பெண் உறவுநிலையைக் குறிப்பதோடு ஒரு புதிய சந்ததி தோன்றுவதற்குரிய ஒருவிதப் பிணைப்பாகும். ஒரு ஆணும், ஒரு பெண்ணும் சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு, அவர்களது வாழ்க்கையைக் கூட்டுப் பொறுப்பில் நடத்துவதற்குப் பலர் அறியச் செய்து கொள்ளும் செயலே திருமணம் எனப்படும். சூழலுக்கு ஏற்ப திருமணம் செய்து கொள்ளும் முறை மாறுபடுகிறது. வடமொழியில் திருமணத்தை மன்றல் என்று வழங்குவர். திருமணம் செய்யும் முறையை எட்டாகவும் வகைப்படுத்தியுள்ளனர். அவற்றுள் இரண்டாவது முறை பிரசாபத்தியம் என்பதாகும். அதனை ஒப்பு என தொல்காப்பியர் கூறுகிறார். தலைமகன் பெற்றோர் வேண்ட தலைமகள் பெற்றோர் மாறாதே உடன்பட்டுத் தலைமகளை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது ஒப்பாகும்.

“வானத்துச்

சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்

தீவலம் செய்வது”

வானத்து அருந்ததியைப் போன்ற தன்மையுடைய கண்ணகியைக் கோவலன், மிகவும் வயது முதிர்ந்த பார்ப்பான் மறைவழிகளைக் காட்டி ஒன்று சேர்க்க மணந்து அவளுடன் தீயினையும் வலன் வந்தான் என்று மேற்காணும் பாடல் அடிகளில் கூறியுள்ளதன் மூலம் பண்பாட்டு மரபுபடியே கோவலன், கண்ணகி திருமணம் நடைபெற்றது என்பதை அறிந்து கொள்ளலாம் (Arunachalam, 1971).

## திருமண வயது

திருமணம் செய்து கொள்ளும் மணமகனுக்கும், மணமகளுக்கும் பத்து ஒப்பியல்புகள் இருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அவற்றில் ஒன்று திருமண வயதாகும்.

“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு” (Ilampoorananaar, 2012)

மணமகனும் மணமகளும் ஒருவரின் ஒருவர் முதியவராக இல்லாமல் ஒத்த பருவத்தினராக இருக்க வேண்டும். அதாவது குழந்தைப் பருவம் கழிந்து பதினாறு வயதுடையவனாக ஆணும், பன்னிரண்டு வயதுடையவளாக பெண்ணும் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். சிலப்பதிகாரத்திலும் பதினாறு வயதுடைய கோவலனுக்கும், பன்னிரண்டு வயதுடைய கண்ணகிக்கும் திருமணம் நடைபெற்றது என்பதை

“ஈகைவான் கொடி அன்னாள் ஈர்-ஆறு ஆண்டு

அகவையாள்;

இருநிதிக் கிழவன் மகன் ஈர்-எட்டு ஆண்டு அகவையான்

மேற்காணும் பாடல்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்”

## ஊழ்

நம் முன்னோர்கள், நல்வினை செய்தால் நன்மைப் பிறக்கும் என்றும், தீவினை செய்தால் தீமை உண்டாகும் என்றும், மக்களாகிய நீங்கள் தீவினையை நீங்கி, நீக்கி நல்வினையே ஆற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள் கணியன் பூங்குன்றனாரும்.

“தீதும் நன்றும் பிறர் தர வாரா

ஆருயிர் முறைவழிப்

படூஉம்" (Saaminaadhaiyar, 2014)

ஒருவருக்கு நன்மையும் தீமையும் அவர்கள் செய்கின்ற செயல்களால் உண்டாகும் என்றும், பிறரால் உண்டாகாது என்றும் கூறியுள்ளார். வள்ளுவப் பெருந்தகையாரும்,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா

பிற்பகல் தாமே வரும்". (Parimelalhagar, 2002)

முற்பகலில் பிறருக்கு துன்பத்தைச் செய்தால் பிற்பகலில் தமக்கு துன்பங்கள் தாமாகவே வந்து சேரும் என்று கூறுகிறார்.

இம்மரபுகளைப் போன்றே இளங்கோவடிகளாரும் "ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்" என்கின்றார். மதுராபதி தெய்வம், வார்த்திகனின் கதையைக் கூறி பாண்டிய மன்னன் நீதி வழுவாமல் ஆட்சி செய்தவன் என்றும், அவனுடைய செங்கோல் வளைந்ததற்கு கோவலனின் ஊழ்வினையே காரணம் என்றும் கண்ணகிடம் கூறியது.

## கோவலனின் ஊழ்வினை

கோவலனின் பழவினை குறித்து, மதுராபதி தெய்வம் பின்வருமாறு கண்ணகியிடம் கூறுகின்றது. கபிலபுரத்து வணிகனான சங்கமன் தன்னிடமுள்ள விலைமதிப்பற்ற அணிகலன்களை விற்றுப் பொருளீட்டும் நோக்கத்தில் மனைவி நீலியுடன் பகைவர் ஊராகிய சிங்கபுரம் வந்து கடைவீதியில் அணிகலன்களை விற்றுக் கொண்டிருந்தான். அப்பொழுது சிங்கபுரத்து அரச காவலான பரதன் (கோவலன்) அவனை ஒற்றன் எனத் தவறாக நினைத்து மன்னனிடம் காட்டி கொன்றுவிட்டான். சங்கமனின் மனைவியான நீலி கணவன் இருந்ததால் வருந்திப் புலம்பினாள். கணவனை நினைத்து நினைத்து வருந்திய நீலி கணவன் இறந்த பதினான்காம் நாள் மலையுச்சியிலிருந்து உயிர்விட்டாள். இறப்பதற்கு முன்பு, எனக்கு இத்துன்பத்தைச் செய்தவர் தாமும் இவ்வாறான துன்பத்தை அடைய வேண்டும் என்று சாபமிட்டு இறந்தாள் என்று கூறியது.

முற்பிறப்பில் சங்கமனைக் கொன்ற பரதனே இப்பிறப்பில் கோவலனாகப் பிறந்தான். கோவலன் முற்பிறப்பில் செய்த தீவினையே இப்பிறப்பில் உயிர் நீங்குவதற்கு காரணமாக அமைந்தது. நீயும் இன்றைக்கு பதினான்காம் நாள் உன் கணவனை பகல்பொழுது கழிந்தபின்னர், வானோர்களின் வடிவிலே காண்பாய் என்றும் கூறியது. ஒருவர் செய்கின்ற வினையானது இந்த பிறப்பில் மட்டுமில்லாமல் அடுத்த பிறப்பிற்கும் வரும் என்பதை எடுத்துக் கூறி மக்களை நல்வழிப்படுத்துவது இக்காப்பியத்தின் பண்பாகும்.

## வினைப்பயன்

மேலும் நல்ல செய்திகளைச் செய்தோர் பொன்னுலகம் சேர்வதும், அன்புள்ளம் கொண்டவர்கள் பற்றின் காரணமாக மீண்டும் பூவுலகில் பிறத்தலும், அறத்திற்கான பயன் கிடைப்பதும், பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் வழிவழியாக நடக்கக்கூடிய பண்பாட்டு மரபுகளாகும். கோவலன் கருணை மறவனாக, செல்லாச் செல்வனாக, இல்லோர்ச் செம்மலாக விளங்கியதால் வானோரின் வடிவத்துடன் பொன்னுலகம் சென்றான். கண்ணகியின் தாய், கோவலனின் தாய், மாதிரி ஆகிய மூவரும் கண்ணகியின் பால் கொண்ட பற்றின் காரணமாக மீண்டும் பூவுலகில் பிறந்தனர். கண்ணகியின் தாயும், கோவலனின் தாயும் சிறப்பான அறச்செயல்களை செய்யவில்லை. அதனால் அவர்களிருவரும் அரட்டன்செட்டியின் மகள்களாக பிறந்தனர். மாதரி தெய்வ வழிபாட்டுக் கொண்டவள். திருமாலை வழிபட்டதன் காரணமாக திருமாலுக்குத் தொண்டு செய்யும் சேடக்குடும்பியின் மகளாக பிறந்தாள் என்று மாடலன், மன்னன் செங்குட்டுவனிடம் கூறினான். (வரந்தருகாதை 120-130 வரிகள்)

முற்பிறப்பில் கோவலன் செய்த தீவினையே இந்த பிறப்பில் இறப்பதற்கு காரணமாகியது. இந்த பிறப்பில் செய்த நல்ல வினைகளே, பிறப்பறுத்து வானுலகம் செல்வதற்கு காரணங்களாயின. கண்ணகியின் தாயும், கோவலனின் தாயும், மாதரியும் இந்த பிறப்பில் செய்த வினைகளே மறுபிறப்பில் பூவுலகில் பிறப்பதற்கு காரணங்களாயின என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார். இக்கூற்றின் மூலம் நல்வினைகளையே செய்ய வேண்டும் என்ற பண்பாட்டு மரபு வலியுறுத்தப்பட்டுள்ளது.

## முடிவுரை

ஒவ்வொரு காதைகளிலும் பண்பாட்டு செய்திகள் பொதிந்துள்ளன. அரங்கேற்று காதையில் இசை நூலோர் வகுத்த முறைப்படியே நாடக அரங்கம் அமைக்கப்பட்டது. யாழிசைகள் வாசிக்கப்பட்டன. மாதவி ஏழு ஆண்டுகள் கற்ற கலையை முதன் முதலில் அரங்கேற்றம் செய்கிறாள். முதல் அரங்கேற்றம் என்பதால் வலதுகாலை முன்வைத்து அரங்கில் ஏறினால் என்றும் இளங்கோவடிகள் கூறியுள்ளார். இவ்வாறாக சிலப்பதிகாரத்தின் தொடக்கம் முதல் இறுதி வரை பண்பாட்டு மரபுகள் காணப்படுகின்றன.

## References

Arunachalam, M. (1971) Silappathigaram Sinthanai, Madurai Kamaraj University, Madurai, India.

Bharathiyar, (2016) MahaKavi Baharathiyar Kavithaigal, Narmadha Padhipagam, Chennai, India

Ilampoorananaar (2012) Tholkapiyam Porul Ilampoorananaar, Gowra Publications, Chennai, India

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India

Saaminaadhaiyar, U.V. (2014) Purananuru, U.V. Saminadhaiyer noolnilayam Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License